செ.வெ.எண்: 557 நாள்: 8.9.2020

**புதுக்கோட்டை பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்ட சிறையில் காலியாக உள்ள மனநல ஆலோசகர் (Councellors) பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.**

**புதுக்கோட்டை மாவட்டச்சிறை கண்காணிப்பாளர் திருமதி.வி.ருக்மணிபிரியதர்ஷினி அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்ட சிறையில் காலியாக உள்ள மனநல ஆலோசகர் (Councellors) பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்டச்சிறை கண்காணிப்பாளர் திருமதி.வி.ருக்மணிபிரியதர்ஷினி அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்ட சிறையில் காலியாக உள்ள மனநல ஆலோசகர் (Councellors) ஒரு பணியிடத்திற்கான பொதுப்போட்டி முன்னுரிமை அற்றவருக்கான விருப்ப விண்ணப்பங்கள் 30.10.2020 ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு முன்னர் கீழ்கண்ட முகவரிக்கு வரவேற்கப்படுகின்றன. இந்த மனநல ஆலோசகர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்போர் சமூகவியல், உளவியல், சமூகப்பணிகளில் முதுநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவராகவும் மற்றும் மனநல நிறுவனம் ஒன்றில் மனநல ஆலோசனை வழங்குதலில் 2 வருடம் முன் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் பொதுப்பிரிவினர் 30 வயதுக்குள்ளும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.சி) 32 வயதுக்குள்ளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (எம்.பி.சி) 32 வயதுக்குள்ளும், ஆதிதிராவிடர் வகுப்பினர் (எஸ்.சி) 35 வயதுக்குள்ளும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் (எஸ்.டி) 35 வயதுக்குள்ளும், ஆதிதிராவிடர் அருந்ததியினர் 35 வயதுக்குள்ளும், இதில் மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகபட்ச வயது வரம்பு 40 க்குள்ளும் இருத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட அனைத்து வகுப்பினர்களுக்கும் விண்ணப்பிப்பதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு 18 ஆகும். சம்பளம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மதிப்பூதியம் மட்டும் மாதம் ரூ.15,000 ஆகும்.

விருப்பமுள்ளவர்கள் சிறைக்கண்காணிப்பாளர், பார்ஸ்டல்பள்ளி மற்றும் மாவட்டச்சிறை, புதுக்கோட்டை -622001, தபால் பெட்டி எண்.27 என்ற முகவரிக்கு விண்ணப்பம் அனுப்பிட வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04322-222220 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். குறிப்பாக 30.10.2020 ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இவ்வாறு புதுக்கோட்டை மாவட்டச்சிறை கண்காணிப்பாளர் திருமதி.வி.ருக்மணிபிரியதர்ஷினி அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**